# வடகிழக்கு மாகாணசபைக்கு புதிய அமைச்சர்களின் பெயர்பட்டியலுடன் முஸ்லிம் காங்கிரஸ் கடிதம்

வடக்கு கிழக்கு மாகாணசபையின் முதல்வராகத் தம்மை நியமிக்குமாறு கோரி ஆளுநர் லெப்டினண்ட் ஜெனரல் நளின் செனிவிரத்தினவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஜனாப் சேகு இஸ்ஸதீன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார், வடக்கு கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சருக்கான கடமைகளை திரு. ஏ. வரதராஜப்பெருமாள் தனது மந்திரி சபையினரோடு துறந்ததிலிருந்து உங்களுக்கு உதவியும் ஆலோசனையும் வழங்க ஒரு முதலமைச்சர் இல்லாதிருப்பதனால் தற்போது பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுள்ள என்னை முதலமைச்சராக நியமிப்பதால் நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மந்திரிகள் சபை உறுப்பினர்களாக நியமிக்க ஜனாப் எம். ரி ஹசன் அலி, ஜனாப் எம்] பி, எம். அப்துல்காதர்.

6 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் ஆறு | விலை ரூபா: 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 46 | வியாழன் | 22-03-1990 | (பங்குனி 09) | ஷஃபான் 24

# வடக்கு கிழக்கு மாகாண சபையை கலைப்பதற்கு சட்டத்தில் சிக்கல் எதுவுமேயில்லை!

## அதனாலேயே இது குறித்து அரசு இன்னமும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை

**தற்போது செயலற்றுப்போயுள்ள வடக்குக் கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது குறித்து அதிகளவு சட்டப்பிரச்சனை.ஏதும் இலலை என்று தெரிவிக்கபபடுகிறது.**

மாகாண சபையைக் கலைப்பதுகுறித்து பலசட்டப் பிரச்சனைகள்,சிக்கல்கள் உள்ளதாக பத்திரிகைகள், சட்டவல்லுநர்கள் தெரிவித்துள்ள போதும் இந்த விடயத்தில் அதிகளவு பிரச்சனை ஏதும்இல்லை என்று அரசதரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எப்போது மாகாண சபை கலைக்கப்படவேண்டும் என்பது குறித்து ஜனாதிபதி முடிவெடுத்ததும் அது சுலபமானதொரு முறையில் கலைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இயக்கங்களுடன் நடைபெற்ற பேச்சுக்களின்போது மாகாண சபை கலைப்புதொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டபோது அரசதரப்பினர் மேற்கண்டவாறு நம்பிக்கை தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது. மாகாண சபையைக் கலைப்பதுதொடர்பாக சுலபமான சிக்கலில்லாத

—6 ஆம் பக்கம் பார்க்க

## அன்னை பூபதி நினைவுதினம் 3-ம் நாளாக கொண்டாட்டம்

வடக்கு கிழக்கு பகுதி எங்கும் நேற்று மூன்றுவது நாளாக அன்னை பூபதியின் நினைவாகத் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது ஆங்காங்கே அடையாள உண்ணாவிரதங்களும் அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெற்றன,

யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அன்னை பூபதியின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஆலயங்களிலும், சனசமூக நிலையங்களிலும் நினைவுதினக் கூட்டங்களும், உண்ணாவிரதங்களும் நடைபெற்று வருகின்றன.

## யாழ். மாவட்ட செயலகத்தில் 2 வாரங்களுக்கு பிறப்பு இறப்பு விண்ணப்பமஏற்கப்படமாட்டாது

அடுத்த திங்கட்கிழமை தொடக்கம் இரு வாரங்களுக்கு பிறப்பு இறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என யாழ்மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

தற்போது தேங்கியுள்ள 25 ஆயிரம் விண்ணப்பங்களுக்கு அத்தாட்சிப்பத்திரங்கள் வழங்குவதற்காகவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (03)

## மட்டு. கல்வித்திணைக்கள ஊழியர் நேற்றுக் காலை வெளிநடப்பு

மட்டக்களப்பு கல்வித்திணைக்கள ஊழியர் அனைவரும் நேற்றுக்காலை வெளிநடப்புச் செய்தனர். பொது நிர்வாக அமைப்பின் 89/49 இலக்க சுற்றறிக்கையின்படி தமக்கு வழங்கப்பட வேண்டிய ஐம்பது வீத ஊக்குவிப்பு அலவன்ஸ் இன்னமும் வழங்கப்படவில்லை என்பதை ஆட்சேபித்தே இவர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

மட்டக்களப்பிலுள்ள ஏனைய திணைக்களங்கள் நான்கு மாதத்திற்கு முன்பே இந்த ஊக்குவிப்புப் படியைப் பெற்றுள்ளன மத்திய மாகாண அமைச்சுகளுக்கு இது குறித்து கடிதம் அனுப்பப்பட்டபோது கடிதம் கிடைத்தது என்ற

— 6 ஆம் பக்கம் பார்க்க

## பரந்தன் தொழிற்சாலை ஊழியர் மறியல் போராட்டத்தில் குதிப்பு

(பரந்தன்)

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் உற்பத்தியை மீண்டும் ஆரம்பிக்கும் கோரிக்கையை வலியுறுத்தி இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் செவ்வாய் முதல்மூன்றுநாட்கள்வீதி (பிக்கெட்டிங்) நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது. நண்பகல் மதிய போசன இடைவேளையின்போது தொழிற்சாலையின் முன்பாக கண்டி வீதியில் சுமார் இருநூறு தொழிலாளர் வரை சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணமும் கோஷங்களை எழுப்பியவாறும் இந் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்,

— 6 ஆம் பக்கம் பார்க்க

## க. பொ. த. சாதாரணப் பரீட்சை அனுமதி அட்டை விநியோகம்

எதிர்வரும் 30-ம் திகதி ஆரம்பமாகவுள்ள க. பொ. த. சாதாரணதரப் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. இ மாதம் 26-ம் திகதிக்குள் அனுமதிப்பத்திரம் வந்து சேராதவர்கள் உடனடியாக பரீட்சைத்திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்:

அத்துடன் அனுமதிப்பத்திரங்களில் பிழையான பாட இலக்கங்கள் போடப்பட்டிருப்

—6 ஆம் பக்கம் பார்க்க

## மாத்தயா இன்று வவுனியாவில்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. வே மகேந்திரராஜா மாத்தயா இன்று வவுனியா வருகின்றார்.

இன்று வியாழக்கிழமை வவுனியா மகாவித்தியாலய திறந்தவெளி அரங்கில் பிற்பகல் 3மணிக்கு நடைபெறும் மேற்படி முன்னணியின் பகிரங்க பொதுக் கூட்டத்தில் மாத்தயாவும் மற்றும் முக்கிய பிரமுகர்களும் உரையாற்றவுள்ளனர் எனசம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறின. (11)

## ஒரிஸாவிற்கு அனுப்பப்பட்டோர் அகதிகள் அல்லர் - கருணாநிதி

(சென்னை)

இலங்கைப் போராளிகளினால் தமிழகம் வன்முறைப் பிரதேசமாக மாறக்கூடாது என்பதற்காகவே இங்குவந்தவர்களை நாம் ஒரிஸாவுக்கு திருப்பி அனுப்பினோம் என தமிழக முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

நேற்று தமிழக சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி

—5 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்த்தேசிய ராணுவத்தைத் தேடி மொனராகல காட்டில் அதிரடி

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் இருந்து தப்பியோடிய தமிழ் தேசிய இராணுவத்தினர் மொனராகலை காடுகளில் தங்கியிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் தற்போது மொனராகலை காட்டுப்பகுதியில் இலங்கை இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். விசேட அதிரடிப்படையினரின் முகாம் ஒன்றும் அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கொடுப்பனவு ஆள்மாரட்டம் வவுனியா பொலிஸார் கைது

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிமண்டில் வைக்கப்பட்டுள்ளார் இது பற்றி தெரியவருவதாவது: மேற்படி கான்ஸ்டபிள் வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் கடமையாற்றும் இன்னுமொரு பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு செல்லவேண்டிய கொடுப்பனவு பணத்தினை கள்ள ஒப்பமிட்டு பணம் பெற்ற விடயம்

—6 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். அரச அலுவலகங்களில் தளபாடங்கள் பற்றுக்குறை

யாழ்மாவட்டத்தில் உள்ள அதிகமான அரச திணைக்களங்களிலும் அரசஅலுவலகங்களிலும் பொதுமக்கள் பாவனைக்கு தளபாடங்கள் பற்றுக்குறை காணப்படுவதாகத்தெரிவிக்கப் படுகின்றது.

தமது தேவைகளைப் பூர்த்தி செய்யவரும் பொது மக்கள் நின்ற நிலையிலேயே சேவைகளைப் பூர்த்தி செய்கின்றனர்.

பல அரச அலுவலகங்களில் பொதுமக்கள் ஓய்விற்காக நிலத்தில் இருப்பதைக் கூடுதலாகக் காணமுடிகின்றது. இது பற்றி உயர் அதிகாரிகளிடம் கேட்டபோது எமது அலுவலகர்களுக்கே தளபாடப்பற்றுக் குறை காணப்படுகின்றது. நிலைமை இப்படி இருக்கையில் எப்படி நாம் பொதுமக்களுக்கு உதவமுடியும் என்று தெரிவித்தனர். (03)

## பனம்பொருள் காட்சிக் கூடம் யாழ்நகரில் திறக்க நடவடிக்கை

(காவலூர்)

யாழ்ப்பாணத்தில் பனை உற்பத்தி பொருட்களின்கண்காட்சிக் கூடமொன்று திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பனையின் மூலப் பொருட்களைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் இக் காட்சியறையில் வைக்கப்படும்.

இக் கண்காட்சிக் கூடம் உள்ளூர், வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகளைக் கவரக்கூடியதாக இருக்கும். இதனைத் திறக்க யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்கின்றது. (24)

### யாழ் செயலக இறைவரிக் கிளையில்

## வாகன லைசென்ஸ் பெறுவோர் தொகை தினசரி அதிகரிப்பு

யாழ். மாவட்ட செயலக இறைவரிக் கிளையில் வாகன அனுமதிப் பத்திரம் பெறுவோர் தொகை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தினமும் சுமார் நூறு பேருக்கு வாகன அனுமதிப் பத்திரம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை மதுவரித்தீர்வை வியாபாரநிலைய பதிவு, நகை அடைவு பிடிக்கும் பதிவு என்பன குறைவாகவே இக் கிளையில் பதியப்பட்டு வருகின்றது. (03)

### வடக்கு கிழக்கில்

## கிராம அபிவிருத்தி சங்கங்கள் அமைக்க, புனரமைக்க தடை

வடக்குக் கிழக்குப் பகுதியில் கிராம அபிவிருத்திச் சங்கங்களை புதிதாக அமைப்பதையோ அல்லது ஏற்கனவே உள்ளவற்றைப் புனரமைப்புச் செய்வதையோ தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது

இதற்கான சுற்றுநிருபம் வடக்கு கிழக்கு மாகாண அரசின் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் சம்பந்தப்பட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (33)

## முல்லைத்தீவு வீதிகள் திருத்த 6 மில்லியன ஒதுக்கப்பட்டது

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வீதிகளை புனர் அமைப்புச் செய்வதற்கு 6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பப்பட்டுள்ளது.

இதில் 15 இலட்சம் ரூபா ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மாத்தயான வீதி அமைப்பதற்கு ஒதுககப்பட்டுள்ளது இத் திருதத வேலைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஒட்டுசுட்டான் நெடுங்கேணி வீதியும், முல்லை நெடுங்கேணி வீதியும் முறையே. உலக வங்கியாலும், பிரித்தானிய அபிவிருத்தி சபையாலும் பார்வையிட்டு ஒப்பந்தங்கள் செய்த பின் கூடிய விரைவில் திருத்தங்கள் செம்யப்படும் என ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் காரியாலத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது (46)

### உங்களுடையதா?

திருநெல்வேலி விவசாயத் திட்டத்தைச் சேர்ந்த இராசதுரை இரவிக்காந்தன் (6308 63511 V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'முரசொலி' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆசிரியபீடத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### அம்பேவெல

## பால்மா தொழிற்சாலைக்கு கிளிநொச்சி பால் அனுப்பப்படும்

கிளிநொச்சி பால் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் இதுவரைகாலமும்பால்உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பபட்ட பாலை தாமே விற்பனை செய்து வந்தது தற்போது மில்க்கோ நிறுவனம் இச்சங்கத்திடமிருந்து நேரடியாகப் பாலை கொள்வனவுசெய்து அம்பேவெல பால்மாத் தொழிற்சாலைக்கு அனுப்பி வருகிறது

இயந்திர சாதனத்திருத்த வேலைகள் முடிவடைந்ததும் கிளிநொச்சியில் வைத்தே பைக்கற்பால், தயிர், நெய், யோக்கற் ஆகிய பால் உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கம்படும். இப்போது மில்க்கோ நிறுவனத்தினர் அதிகவிலைக்கே பால் கொள்வனவு செய்து வருகின்றனர். அதே வேளை இயந்திரத்திருத்த வேலைகள் வெகு துரிதமாகவும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (35)

### அன்னை பூபதி நினைவாக

## ஒரு மாத காலத்திற்கு தியாகதினம் அனுட்டிப்பு

உலகில்உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த முதலாவது பெண்மணியான அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் ஈராண்டு நினைவை முன்னிட்டு மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், ஆகிய எட்டு மாவட்டங்களிலும் அவர் உயிர்நீத்த தினமான ஏப்ரல் 19 ஆம்திகதிவரையும்''தியாக தினமாக'' அனுட்டிப்பதற்கான விரிவான ஏற்பாடுகளை அன்னை பூபதி நினைவுப் பணி மன்றம் மேற்கொண்டுள்ளது.

பாடசாலை மாணவர் அமைப்புக்கள், கிழக்குப் பல்கலைக்கழக, யாழ். பல்கலைக்கழக அமைப்புகள், மற்றும் பொதுத்தாபனங்கள், வர்த்தக சங்கங்கள், மட்டக்களப்பு மாவட்டத் தொழிற்சங்கச் சம்மேளனம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் அன்னை பூபதி நினைவுப்பணி மன்றம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

ஒருமாத காலத்திற்கு அடையாள உண்ணாவிரதங்கள், விசேடபூசைகள், அன்னதானங்கள், சிரமதானங்கள் என்பன தொடர்ச்சியாக நாடத்தப்படும் ஏப்ரல் 19 ஆம் திகதி இறுதிநாள் மட்டக்களப்பு கல்லடியில் அமைக்கப்பட்டுள்ள அன்னை பூபதி நினைவுத்தூபி திறப்புவிழாவும், பொதுக்கூட்டமும் நடைபெறும்.

இந்திய இராணுவம் நிபந்தனையற்ற யுத்தநிறுத்தத்தை அமுல்படுத்த வேண்டும், விடுதலைப் புலிகளுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும், ஈழத்தமிழினத்தை அழிக்கும் நடவடிக்கைகளை இந்தியா உடன் நிறுத்தவேண்டும் என்றகோரிக்கைகளை முன்வைத்து அன்னை பூபதி கணபதிப்பிள்ளை மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் 19 3 88 இல் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

ஒரு மாதகாலம் தனது கோரிக்கைகளை வலியுறுத்தித் தொடர்ச்சியாக உண்ணாவிரதமிருந்த அன்னை பூபதி 19.4.88 அன்று உயிர்நீத்தார். (05)

## நயினாதீவு கடற்படையினர் சோதனைகள் இடைநிறுத்தம்

(புங்குடுதீவு)

நயினாதீவில் முகாமிட்டிருக்கும் கடற்படையினர் தற்போது நெடுந்தீவு மக்களைச் சோதனையிடும் பணியினை கடந்த சில நாட்களாக நிறுத்தியுள்ளனர்.

கடந்த காலங்களில் நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு வரும் பிரயாணிகள் நயினாதீவு கடற்படைத்தளத்திற்கு வந்துபோவது கட்டாயப்படுத்தப்பட்டிருந்தது. தற்போது அங்கு செல்லவேண்டிய நிலை ஏற்படவில்லையென தெரிகிறது. (20)

## ஜனசக்தி பெறும் நூறு பேருக்கு மரவேலைப் பயிற்சி நெறி

யாழ். மாவட்ட சிறுகைத்தொழிற் திணைக்களம் தனது மரவேலைப் பயிற்சி நிலையங்களில் இம்முறை ஜனசக்தி உதவி பெறும் குடும்பங்களிலிருந்து நூறு இளைஞர்களைத் தெரிவு செய்து பயிற்சியளிக்க உள்ளது.

இப்பயிற்சிக்காக இளைஞர்களைத் தெரிவு செய்து அனுப்புமாறு யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபரை யாழ் மாவட்ட சிறுகைத் தொழிற் திணைக்கள அத்தியட்சகர் கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்படுபவர்களுக்கான பயிற்சி மானிப்பாயிலுள்ள மரவேலைப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும். (6)

## குடத்தனைப் பாடசாலைக்கு மதிய உணவு வழங்ககோரிக்கை

வடமராட்சி கிழக்கு பின்தங்கிய பகுதியிலுள்ள குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவுவழங்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை அபிவிருத்திச்சபை யாழ்ப்பாண மாவட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளருக்குத் தந்தியை அனுப்பிவைத்துள்ளது.

ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் பணிப்பின் பேரில் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகின்ற போதும் ஒரு சில பாடசாலைகளின் மாத்திரம் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது அம்மாணவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பெற்றோர்களும் கலத்தவலையடைந்துள்ளனர்

இப்பாடசாலை மாணவர்களின்பாதிப்பையும் பெற்றோர்களின் கவலையையும் நீக்கி பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவைவழங்க கல்வித்திணைக்களம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பெற்றோர்களின் அக்கோரிக்கையில் கோரப்பட்டுள்ளது. (15)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பின்வரும் 2 லொறிகளும் கார் ஒன்றும் விற்பனைக்கு உண்டு (1) 24 Sri 6431 BMCலொறி (2) 24Sri 3251 BMC லொறி (3) Car 8 Sri 3174 மொரிஸ் ஒக்ஸ்போட் (4) Paper cutter24Inches தொடர்பு கொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி, 53, K.K S. ரோட், யாழ்ப்பாணம். 03176

### தேவை

சமையல்காரர், சமையல் வேலை பழகுபவர்கள் உணவு பரிமாறுபவர்கள் தேவை. யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற் முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். நேரில்வரவும் (காலை 9 00—11 00 வரை) அல்லது விண்ணப்பிக்கவும் 03181

### விற்பனைக்கு

14 இஞ்சி கிறைண்டர் விற்பனைக்கு உணடு. தொடர்பு கொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி 53, K K S வீதி, யாழ்ப்பபணம். 03182

### தவறிவிட்டது

667482062 V இலக்கம் கொண்ட அடையாள அட்டை பட்டப்படிப்புக் கல்லூரியில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் சு. சசிகலா, இல்வாரை வீதி மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. எனும் முகவரிக்கோ அல்லது முரசொலிக் காரியாலயத்திலோ ஒப்படைக்கவும். 03184

★ ஜேர்மனி

★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு போக விரும்புபவர்கள் எம்மை தொடர்பு கொள்ளவும்

★ ஈராக்

நாட்டுக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1. விவசாய மேற்பார்வையாளர் | (2) | I. D 130 |
| 2. கிளீனஸ் மேற்பார்வையாளர் | (2) | I. D 125 |
| 3. கார் பெயின்டர் | (20) | I. D 100 |
| 4. தச்சு தொழிலாளர் | (20) | I. D 80 |
| 5. மேசன் தொழிலாளர் | (20) | I. D 80 |
| 6. பிற்றர் (பொருத்துபவர்) | (20) | I. D 80 |
| 7. விவசாயத் தொழிலாளர் | (50) | I. D 65 |
| 8. கனரக வாகனச் சாரதி | (4) | I. D 110 |

(உணவு, வைத்தியம், தங்குமிடம் இலவசம்)

6 புகைப்படம், கடவுச்சீட்டுடன் எம்மை தொடர்பு கொள்ளவும்.

V.T.R.TRAVELS

41,3rd Cross Street Jaffna

03113

A|L Physics

ஆசிரியர்

R. சத்தியசீலன்

A/L 90 Day Classes

(Mon to Fri)

8. 30 A M ஒலியியல்

9. 30 ஒட்டமின்னியல்

ஆரம்பமாகிவிட்டது

B. M. C முன்லேன்

யாழ்ப்பாணம்

03174


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயநாதம்

வியாழக்கிழமை 22—03—1990

## நல்வாக்கு

எங்கெல்லாம் சர்வாதிகாரம் உண்டோ அங்கெல்லாம் அநீதியும், ஆத்திரமும் உண்டாகவே செய்யும்
-காந்தி

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## ஜனாதிபதி எடுத்த நல்லதோர் முடிவு

இலங்கையின் ஜனாதிபதி பிரேமதாஸ பல நல்ல முடிவுகளை இப்போது அறிவித்துக் கொண்டிருக்கின்றார்.

அதில் ஒன்றுதான், இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இயங்கும் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவை மூடும்படி அவர் பிறப்பித்த உத்தரவாகும்.

இஸ்ரேல் பலஸ்தீனியர்களை அங்கீகரித்து ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வாபஸ் பெறவேண்டும்;

அமெரிக்கா தெரிவித்துள்ள மத்திய கிழக்குச் சமாதான உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்விரு நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டாலே மீள இலங்கையில் நலன்காக்கும் பிரிவு இயங்க அனுமதிக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு ஏப்ரல் 20-ம் திகதிக்குமுன் மூடப்படும் என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண தெரிவித்துள்ளார்.

1970-ம் ஆண்டு பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்தில் இஸ்ரேலுடனான உறவை இலங்கை முதலில் துண்டித்தது.

அப்போது உலக அரங்கில் இஸ்ரேலுக்கு எதிராக எழுந்த குரல்களுக்கு ஆதரவாகவும், முஸ்லிம் மக்களின் குரலுக்குச் செவிமடுக்கும் முகமாகவுமே அன்று அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1980 களில் இலங்கையில் இனப்பிரச்சினை உச்சக் கட்டத்தை அடைந்தபோது ஜே. ஆர் தலைமையிலான இலங்கை அரசு மீள இஸ்ரேலுடனான தனது உறவை வளர்த்துக் கொண்டது.

இதற்கு எதிராகப் பல முஸ்லிம் அமைப்புக்களும், தமிழ் மக்களும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்தனர்.

இங்கு திறக்கப்படுவது வெறும் நலன்காக்கும் பிரிவுதான்; இஸ்ரேலிய தூதரகமல்ல என்று கூறி இலங்கை அரசு இப் பிரச்சினையைச் சமாளித்துக் கொண்டது.

தமிழ் மக்களின் போராட்டம் வளர்ச்சியடைந்து சென்றபோது அதனை ஒடுக்குவதற்கு இலங்கை இராணுவத்திற்கு இராணுவத் திட்டமிடல்களையும், ஆலோசனைகளையும், இராணுவப்பயிற்சிகளையும் வழங்கி வந்தது இந்த நலன்காக்கும் பிரிவு.

இதற்கெதிராகப் பலத்த கண்டனங்களும், எதிர்ப்புக்களும் எழுந்த போதெல்லாம் பதவியிலிருந்த ஜே.ஆர் அரசு அதனை அசட்டை செய்துவிட்டு எதேச்சாதிகாரப் போக்கில் நடந்து கொண்டது.

எனினும் இந்த இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவினாலே தமிழ் மக்களின் போராட்டத்திற் பாரியளவு பின்தள்ளல் எதனையும் செய்ய முடியவில்லை.

இன்று ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையிலான அரசு தமிழர் பிரச்சினையில் ஒரு புதிய அணுகுமுறையைக் கைக்கொள்வதாலும்;

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இலங்கை அரசு நிதியுதவிகளைப் பெறவேண்டி இருப்பதாலும்;

முஸ்லிம் மக்களின் எதிர்ப்பைத் தணித்து அவர்களைத் தம்பக்கம் வென்றெடுக்க வேண்டியிருப்பதாலும் இந்த முடிவை எடுத்துள்ளது எனக் கூறப்படுகிறது.

இதற்குச் சாதகமாகச் சர்வதேச அரசியற் சூழல் இருப்பதால் இலங்கை அரசு அதனைப் பயன்படுத்தி இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூடிவிட முயல்கிறது.

நிலைமைகள் எவ்வாறுயினும் இலங்கையிலிருந்து இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவு மூடப்படுவது என்பது நாட்டு மக்களின் நலன்களைக் காக்க உதவும் என்பதில் ஐயமில்லை.

---

சர்வதேச மனித உரிமைகள் இயக்க அறிக்கை

# உலகில் ஆண்களுக்கு சமனாக பெண்களுக்கு உரிமை மறுக்கப்பட்டாலும்; சித்திரவதைகள்...

இன்றைய நவீன உலகில் மனித உரிமைகள்மீது திணிக்கப்பட்ட பல்வேறு மனித வன்முறைகளாற் பெண்களும் பல வழிகளால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தமது நாளாந்த நடைமுறை வாழ்வில் இந்த மனித வன்முறைகளாற் பெண்கள் பலவழிகளாலும் பாதிக்கப்படுவதைப் பல சம்பவங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன;

பெரும்பாலான பெண்கள் அனாதை விடுதிகளிற் கற்பழிப்பு, பலாத்காரம், பாலியல் வன்முறை உட்பட உள-உடல் ரீதியான வன்முறைக் கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். எவ்விதமான உறவுகளின் தொடர்புகளுமின்றி இத்தகைய பெண்கள்காப்பகத்தில்வாழும் பெண்கள் பிரதிஉபகாரமாகப் பாலியல் பரிமாற்றங்களுக்குப் பாவிக்கப்படுகின்றனர்.

இத்தகைய முறையிற் பெண்கள் வன்முறைகளால் தரக்குறைவாக நடத்தியதாகப் பல பெண்கள் காப்பகங்கள், விடுதிகள் என்பனமீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றன. பொலிசாரால் தாக்கப்பட்டமைக்கும், அனாதைப் பெண்களைத் தரக்குறைவான முறையில் வழிநடத்திச் சென்றமைக்கும் இத்தகைய விடுதிகளின் உரிமையாளர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

ஹொங்கொங்கில் ஒரு இரவு நேர முற்றுகையின்போது மிகக் கொடூரமான முறையிற் பொலிசாரின் தாக்குதல்களுக்குள்ளாகிக் காயமடைந்த 27 இளம் பெண்களை இத்தகைய விடுதிகளில் இருந்து விடுவித்துள்ளார்கள். அவர்களில் 28 வயதுடைய ஒன்பது மாதக் கர்ப்பிணிப் பெண்ணும் அடங்குவார். வயிற்றில் உதைக்க எத்தனித்த பொலிசாரிடம் இருந்து தப்புவதற்காக முயற்சித்தபோது முழங்காலிலும், கைகளிலும் பலமான காயங்களுக்கு இவர் உள்ளாகியிருந்தார். பெரும்பாலும் கர்ப்பிணிப் பெண்களே இத்தகைய கொடூரமான வன்முறைச் சித்திரவதைகளுக்கு ஆளாகி உள்ளார்கள். இத்தகைய சித்திரவதைகளுக்குப் பின்னர் கருச் சிதைவுகளுக்கு ஆளாகிப் பாரதூரமான விளைவுகளுக்கு இப் பெண்கள் உள்ளாகுவது மிகவும் பயங்கரமானதொன்றே.

கற்பழிப்பு, பால் ரீதியான வன்முறைக் கொடுமைகள் என்பனவே பெண்கள் மீது அதிகமாகப் பிரயோகிக்கப்படுகின்றன. இந்த ரீதியில் அதிக பட்ச உள, உடல் ரீதியாகப் பாதிப்புக்களையும், வேதனைகளையும் ஏற்படுத்துவதே வன்முறையின் உச்சமாகக் கணிக்கப்பட்டது. தற்போதும் கூடப் பல நாடுகளிற் பலாத்காரமான பாலியற் சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிராமங்களில் இராணுவம் நிலை கொள்ளும் போதே கற்பழிப்பு வன்முறைகள் அதிகம் இடம்பெறுகின்றன. வருடத்திற்குச் சுமார் ஆயிரம் பெண்கள் இந்தியாவில் மட்டும் கற்பழிக்கப்படுகின்றனர்.

குற்றம் சுமத்தப்பட்ட ஆண்களைக் கைதுசெய்வதற்கோ, அன்றி அவர்கள் பற்றித் தகவல்களை அறிவதற்கோ பெண்கள் கற்பழிக்கப்பட்டும், சித்திரவதைகள் செய்யப்பட்டும் இருக்கின்றனர். இலங்கையில் இத்தகைய சம்பவங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. பொலிசாராலோ, இராணுவத்தாராலோ தேடப்பட்டுவரும் உறவினர் அல்லது ஆண்கள் பற்றி விபரங்களை அறிவதற்குப் பெண்கள் கைது செய்யப்பட்டுக் கற்பழிக்கப்பட்டுள்ளார்கள்.

பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்ற பேரிற் கைதுசெய்யப்பட்ட சகோதரர்கள் நிமித்தம் மார்ச் 88-ல் கைதுசெய்யப்பட்ட 16 வயது யுவதி ஒருத்தி மீது எவ்விதக் குற்றங்கள் சுமத்தப்படாத போதும் 1வருடத்திற்கு மேலாகச் சிறையில் வைத்திருக்கப்பட்டாள். இவளுடன் இவரது இளைய சகோதரனும் அழைத்து வரப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டார். விசாரணையின்போது சாதகமான முறையில் நடந்து கொள்ளாத காரணத்தால் இப் பெண்மீது குண்டாந்தடி அடிகள் பிரயோகிக்கப்பட்டன. கைகளும், விரல்களும் வீங்கி மயக்கமாகும் வரை இவள்மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டது.

கௌத்தமாலா என்ற இடத்தில் மனித உரிமைகள் ஸ்தாபனத்துடன் தொடர்புடையவர் என்ற காரணத்திற்காக குற்றம் சுமத்தப்பட்ட ஒருவரின் மைத்துனியும் மகளும் பயமுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளார்கள். இதற்காக 1989-ல் அவரது மகள் இனம் தெரியாத நபர்களால் கடத்த முயற்சிக்கப்பட்டார். ஆண்கள் சார்பாகவே அநேக பெண்கள் கைதாக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

பொலிசாராலோ - அல்லது பொதுவானவர்களாலோ பெண்கள் கற்பழிக்கப்பட்டால் அதன் நிமித்தம் நீதிமன்றத்தில் ஆஜராகும் பெண்கள் தாம் கற்பழிக்கப்பட்டது சார்பாக சரியான ஆதாரத்தை நிரூபிக்காத விடத்து அவர்கள் மீதே குற்றம் சுமத்தப்பட்டுவிடுகின்றது.

1983-ல் பாகிஸ்தானில் கண்பார்வையற்ற பெண் ஒருத்தி வீட்டு உரிமையாளரின் மகனால் கற்பழிக்கப்பட்ட போது சரியான முறையில் குற்றவாளியை இனம் காட்டாத காரணத்திற்காகவும், குற்றத்தை சரியான முறையில் நிரூபிக்கமுடியாது போன காரணத்தாலும் அவள் மீதே குற்றம் சுமத்தப்பட்டது. கொடூரமான முறையில் கற்பழிக்கப்பட்டு - கர்ப்பமுற்ற பெண்கள் மௌனமாக இருப்பதைச் சாதகமாக எடுத்துக் கொள்கின்றனர்,

1985-ல் தென்ஆபிரிக்காவில் இத்தகைய மனித சித்திரவதைகளையும், வன்முறைகளையும் எதிர்த்துக் குரல் [illegible] விக்டோ சரியா'' என்ற பெண் வழக்கறிஞர் கொலை செய்யப்பட்டார். ஆண்கள் போன்றே பெண்களும் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார்கள்.

1975 - ல் பிரிட்டனில் ஒரு குண்டு வெடிப்பு சம்பவத்திற்காகக் குற்றம் சாட்டப்பட்டு கைதான 17 வயது இளம் மாணவி 1989-ல் விடுவிக்கப்பட்டாள். பெண்கள் மீது திணிக்கப்பட்ட மனித வன்முறைகளை எதிர்த்துக் குரல் கொடுத்த ஆயிரக்கணக்கான பெண்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

பெருநாட்டில் கைதான மரியாஜீன் என்ற பெண் தன் மீது பலவிதமான சித்திரவதைகளைக் கொடூரமான முறையில் மேற் கொண்டதாகவும், பல முறை தான் கற்பழிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். வயிற்றில் உதைக்கப்பட்டு, பற்கள் பிடுங்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்ட இப் பெண்ணைத்தலைகீழாக கட்டித் தொங்க விட்டும் கொடூரமான முறையில் சித்திரவதைகளை மேற்கொண்டனர்.

பயங்கரவாதி என்று குற்றம் சுமத்தப்பட்ட முப்பது வயதுடைய ஒரு கர்ப்பிணிப்பெண் ஒருத்தி பிராயணத்தின் போது கைது செய்யப்பட்டாள். கண்கள் கட்டப்பட்டு பலாத்காரமாக அழைத்துச் செல்லப்பட்ட இவள் பொலிசாரின் கொடூரமாக சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டாள். கழுத்து நெரிக்கப்பட்டு, தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் கற்பழிக்கப்பட்டாள்.

இக் கொடுமையில் இருந்து தப்புவதற்காகக் குற்றத்தை ஒப்புக்கொண்டு கைச்சாத்திடப்பட்டதின் பின்னர் சிறையில் ஏற்பட்ட கருச்சிதைவின் பின்னர் விடுவிக்கப்பட்டாள். 'கெட்டயுத்தம்' (dirty war) சம்பந்தமாக ஆர்ஜன்டின் இராணுவத்தால் குற்றம் சுமத்தபபட்ட மரியா என்ற பெண் திடீரென மர்மமான முறையில் காணாமல் போனாள் 1976 - ம் ஆண்டு காணாமல் போன இப் பெண்ணின்உடல் 1989-ல் மருத்துவ விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்டது வயிற்றில் ஏற்பட்ட இரு துப்பாக்கி ரவைகளால் இவளின் குழந்தையும் மரணமடைந்துவிட்டது. கண்டெடுக்கப்பட்ட இரு எலும்புகள் இவற்றிற்கு ஆதாரமாக விளங்குகின்றன. 1976-ல் மர்மமான முறையில் மறைந்து போனகர்ப்பிணிப் பெண்களில் இவளும் ஒருத்தி.

## 24 பெண்கள் ஈரானில் கல்லால் எறிந்து கொலை

இன்றைய உலகில் பால் ரீதியான சித்திரவதை வேறுபாட்டினைச் சித்திரவதையாளர்கள், சிறைக்காவலர்கள் மேற்கொள்வதில்லை. ஆண்களுக்கு மேற்கொள்ளப்படும் சித்திரவதைகளே பெண்கள்மீதும் பிரயோகிக்கப்படுகின்றன.

தமது உரிமைகளுக்காகவும் பெண்களின் நிலைப்பாட்டினை வலியுறுத்தும் வண்ணம் குரல் கொடுக்க முற்படும் போதும் பெண்கள்மீது வன்முறை பிரயோகிக்கப் படுகின்றது. இது நாட்டுக்கு நாடு நடைமுறைக்கு ஒவ்வாத வகையில் வித்தியாசமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றது.

ஈரான் நகரில் 1989-ல் கல்லால் எறிந்து சித்திரவதை செய்யப்பட்டு மரணமான 36 பேரில் 24 பேர் பெண்கள் உடனடியாக மரணம் சம்பவிக்கும் வண்ணம் பெரிய கற்களைப் பிரயோகிக்காது குற்றவாளி அதிக பட்சம் வேதனையையும், சித்திரவதையையும் அடைய வேண்டும் என்ற நோக்கோடு சிறிய கற்களையே பாவிக்க வேண்டும் என்று இஸ்லாமிய நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லை: மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்

# விவசாய கடனாக 38 லட்சம் ரூபா வழங்கியுள்ளது இவ்வருடம் மேலும் 100 லட்சம் வழங்கப்படும்

முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சமாசத்தினால் கடந்த வருடம் இறுதிவரை இம்மாவட்ட விவசாயிகளுக்கு விவசாயக் கடனாக38இலட்சத்து 25ஆயிரத்து 288ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், பாண்டியன் குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 9 இலட்சத்து 5 ஆயிரத்து 258 ரூபாவும், துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 8 இலட்சத்து 70ஆயிரம் ரூபாவும் விவசாயக் கடனாக வழங்கப்பட்டுள்ளன.

இம் மாவட்டத்தில் இச் சமாசத்தினால் படித்து வேலையற்றிருக்கும் 100 யுவதிகளுக்கு சுய தொழிலை ஊக்குவிக்கு முகமாக தையல் மெசின்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வருடத்தில் விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வருட நெற்செய்கை, உபஉணவுச் செய்கைக்குதவும் வகையில் 100 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொடுக்க வேண்டிய ஆக்கபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டோருக்கு முல்லைத்தீவு அரசாங்க அதிபரிடமிருந்து கடன் பெற்று தலா 500 ரூபா வழங்க வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட சிக்கன கடன் உதவு கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் திரு. எஸ், சிவானந்தன் 'முரசொலி' நிருபருக்கு தெரிவித்தார். (38)

## பொடிச் செய்திகள்

### சங்கானை பிரிவில் நாடகப் போட்டி

அராலி தெற்கு ஸ்ரீமுருகன் சன சமூக நிலையத்தின் பொன் விழாவை முன்னிட்டு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சன சமூக நிலையங்களுக்கிடையில் 45 நிமிட நாடகப் போட்டியொன்றை நடாத்துவதென்று நிலைய நிர்வாகிகள் தீர்மானித்துள்ளார்கள். எதிர்வரும் தமிழ்ப் புதுவருட பிறப்பு தினத்தன்று பொன் விழாவை சிறப்பாக நடாத்துவது என்றும் அதனையொட்டி ஆண்கள்- பெண்களுக்கான தனித்தனி சைகிள் ஓட்டப் போட்டி மரதன் ஓட்டப் போட்டி ஆகிய பல்வேறு போட்டி உட்பட பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. புத்தாண்டு இரவு நடைபெறும் விழாவில் கலை நிகழ்ச்சிகள் பரிசளிப்பு என்பன நடைபெறும். பொன் விழா மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. (13)

### மட்டு. நூலகத்தில் இப்படியொரு கட்டுப்பாடு

மட்டக்களப்பு பொது நூலகத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகளுக்கும் ஈழத்து தமிழ் சஞ்சிகைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பத்திரிகைகளான 'இந்து' தினமணி கதிர் போன்ற பத்திரிகைகளை தருவிக்கும் பொது நூலக நிர்வாகம் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகளை கொள்வனவு செய்யாது அவற்றிற்கு தடை விதித்துள்ளது.

அதே வேளை மல்லிகை போன்ற சஞ்சிகைகளுக்கும் இந்நூலகத்தில் தடைவிதிக்கப்படடுள்ளமை குறித்து வாசகர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். (05)

### கடனுதவு சங்க புதிய நிர்வாகிகள்

சாவகச்சேரி ஏற்றுமதி கிராம சிக்கன கடனுதவிக்கூட்டுறவுச் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:—

தலைவர்— திருமதி இராஜேஸ்வரி துரைச்சாமி உப தலைவர் செல்வி அர்.புஸ்பமலர், செயலாளர்-வ திரவியநாயகம்,உப செயலாளர்—செல்வி.கே சுாபஷினி, பொருளார்— செல்வி.எஸ்.சிறிகாந்தரூபி, நிர்வாகசபை உறுப்பினர்களாக இருவர் தெரிவு செய்யப்பட்டனர். (39)

### யாழ். கல்லூரியில் பேடன் பவல் நினைவு தினம்

யாழ்ப்பாணக் கல்லூரியிற் சாரணர் இயக்க மூலபிதாவான பேடன் பவல் அவர்களின் நினைவுத்தினம் அண்மையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரிச் சாரணர் இயக்கப் பொறுப்பாசிரியர் எஸ். திசைராஜா இவ்விழாவைப் ஒழுங்கு செய்திருந்தார். மேற்படி விழாவிற் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன் தமது பேச்சில்;

சாரண இயக்கமே, சிக்கல் நிறைந்த உலகத்திற் தொடர்ந்து போராடுவதற்கேற்ற வலுவான சக்தியை அளிக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு நற் செயலைச் செய்து கொண்டிருக்க வேண்டும். சாரண இயக்கப் பயிற்சி அதற்கு எல்லா விதங்களிலுங் கைகொடுக்கும். இயற்கையை இரசித்து, உணர்வதற்குச் சாரண வியக்கமே உண்மையான பயிற்சியை வழங்குகின்றது' எனக் குறிப்பிட்டார்.

### உழவு இயந்திரம் கிடைத்தது

ஒட்டுசுட்டான் 19ம் கட்டையில் அமைந்துள்ள இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்திற்கு, புதிய உழவு இயந்திரம் ஒன்று தலைமைக்காரியாலயத்தால் வழங்கப்பட்டுள்ளது. இதன்வருகையால் இக்கூட்டுத்தாபன உற்பத்திசம்பந்தமான விடயத்திலும் கழிவுப் பொருட்களை குறைந்த. செலவில் அகற்றுவதிலும்முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. (46)

### பாராட்டு விழா

வேலணைக் கோட்டக்கல்வியின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் 1989ம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அதி கூடிய மாணவர்களைக் கொண்ட பாடசாலை வேலணை சைவப்பிரகாச வித்தியாலயமாகும் இவ்வித்தியாலயத்தில் சித்தியடைந்த மாணவர்களையும், பெற்றோர்களையும்,கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டுமுகமாக அப்பாடசாலை அதிபர் அ. கலாதரன் தலைமையில் அண்மையில் பராட்டுவிழா நடைபெற்றது அவ்விழாவில் அதிபர் உரையாற்றுகையில் இப்பாராட்டு விழாவானது பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மேலும் ஊக்கிவிப்பதோடு ஏனையமாணவர்களை உற்சாகப்படுத்துவதற்கு ஓர் வழிகாட்டாக விளங்க வேண்டும் என்றும்கூறினர்.

### மந்திரி தேவராஜ் யாழ் விஜயம்

இந்து சமய கலாசார விவகார ராசாங்க அமைச்சர் திரு பி பி. தேவராஜ் விரைவில் யாழ்ப்பாண விஜயம் ஒன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

வட பகுதியிலுள்ள இந்து ஸ்தாபனங்களும் கலாசார அமைப்புகளும் இவ் விஜயத்திற்கு அழைப்பு விடுத்திருந்ததெனத் தெரிவிக்கப் படுகிறது,

இங்கு சில நாட்கள் தங்கியிருக்கும் வேளை அமைச்சர் இந்துக் கோயில்கள் பலவற்றிற்கும் செல்லவுள்ளார்.

### லங்கா சிமெண்ட் தொழிலாளர்சங்க பொதுக் கூட்டம்

லங்கா சிமெந்து லிமிடெட் ஸ்தாபனத்தில் வேலை செய்யும் கைத்தொழில் பொதுத்தொழிலாளர் சங்க ஆண்டு பொதுக் கூட்டம் அண்மையில் மேற்படி சங்கத்தின் தலைவர் எஸ்.கே ஜோதிபாலா தலைமையில்நடைபெற்றது.

தலைவர்தனது தலைமைஉரையில் கடந்த ஆண்டு தமது சங்கம் ஆற்றிய சேவையையும் சங்க உறுப்பினர்கள் காட்டிய ஒத்துழைப்பையும் நினைவு கூர்ந்தார் கூட்டத்தில் கலந்து உரை நிகழ்த்திய தாய்ச் சங்கப் பிரதநிதியும், யாழ்மாவட்டச் செயலாளருமாகிய குகதாஸ் ஒரு தொழிலுக்கு ஒருசங்கம் இருக்கவேண்டியதின் முக்கியத்துவத்தை வலியுறுத்திக் கூறினார்.தென் இலங்கையில் உள்ள பிரதான 27தொழிற்ச் சங்கங்களினால் முன் வைத்து நடத்தப்படும் போராட்டத்தில் வட பகுதித் தொழிலாளர்களும் சேர்ந்து கொள்ள வேண்டும் என்றும் வாழ்க்கைச்செலவின் அதிகரிப்பை எதிர்த்தும் ஜன நாயக மீட்புக்காகவும்.மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் தொழிலாளர் ஒன்றுபட்டுப்போராட வேண்டும்என்றும் அவர் அங்கு கூறினர்.

நடப்பு வருடதது தலைவராக ராதாகிருஸ்ணனும் செயலாளராக குகநாதனும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

### ரயில்களுக்கு கல்லெறி

தெல்லிப்பழை, மல்லாகம் கொக்குவில் பகுதிகளில் யாழ்தேவி ரயிலுக்கும்,இரவுரயிலுக்கும் கற்கள்வீசப்படுவதாக புகையிரத பாதுகாவலர்கள் புகார் தெரிவித்துள்ளார்கள்.

கல்வீச்சினால் பயணிகள் காயப்படுவதோடு ரயில்பெட்டிகளின் கண்ணாடிகளும் உடைகின்றன.இக் கல்வீச்சு அடிக்கடி இடம்பெறுவதால் இதன் உள் நோக்கம் சரியாகப் புரியவில்லை [illegible] வர் முரசொலிக்குத் தெரிவித்தார். (5)

## முரசொலிக்கு வந்த கடிதம்

### பாடத்திட்டத்தை முடிக்காமல் பரீட்சை வைப்பதா?

ஆசிரியர்
முரசொலி

இங்குள்ள அரச பாடசாலைகளில் முதலாந்தவணைப்பரீட்சை நடைபெறுவதற்கு உரிய வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்தத்தவணையை விளையாட்டுத் தவணை என்று பெற்றோர் சொல்கிறார்கள். பள்ளிக்கூடம் மாணவன் சென்று வீடு திரும்பிய பின்னர் என்ன பாடசாலையில் படிப்பித்தவர்கள் என்று கேட்டால் விளையாட்டுப் பழகினனுங்கள் என்று சொல்கிறார்கள். இந்தத்தவணைக்குரிய பாடத்திட்டம் முற்றுப் பெறுமலே பரீட்சையை வைப்பதற்குஎவ்வாறுகல்வி அதிகாரிகள் உடன்பட்டார்கள்? அல்லது பிள்ளைகள்ரியூசனில்படித்துமுடித்து விடுவார்கள் ஆனபடியால் பரீட்சை வைப்பதில் தவறில்லை என கல்வி அதிகாரிகளும் எண்ணுகிறார்களா? இலவசக்கல்வி என்ற பெயரில் கோடிக்கணக்கான ரூபாய்கள் கட்டிடங்களிற்கும், ஆசிரியர் சம்பளத்திற்கும் மக்களின் வரிப்பணத்தில் இருந்து செலவு செய்யப்படுகிறது. இவ்வாறு செலவுசெய்யப்படும் பணத்தினால் விளையும் பலாபலன்கள் மக்களைப்போய்ச் சேருகின்றதா? சாதாரண ஏழைப்பெற்றோர் ரியூசனுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பமுடியுமா? நல்ல கொள்கைகள், நல்ல திட்டங்களை அரசு அமுல்ப்படுத்தும்போது அரசு அதிகாரிகள் ஏன் ஒத்துழைப்பு செய்ய மறக்கிறார்கள்? ஊர் பாடசாலைகளில் ஊர் உபாத்தியாயரே பாடம் படிப்பிக்கிறார்கள் இந்த நிலையில் ஊர் பாடசாலையை ஊர் உபாத்திமார்கள் ஏன் முன்னேற்றம் அடையச் செய்யக்கூடாது. தங்களிற்கு மாதா மாதம் ஒழுங்காக சம்பளம் வந்தால் போதும் பிள்ளைகள் எக்கேடுகெட்டால் என்ன? என்ற எண்ணம் ஆசிரியர்களிடம் இருக்கும் வரை எமது பகுதியில் கல்வி முன்னேற்றத்தை எதிர்பார்ப்பது ரொம்பக்கடினம்.

ந. சிவரஞ்சன்
செயலாளர்
சுழிபுரம் கிழக்கு அபிவிருத்திச் சங்கம்.

### வார விடுமுறைகள் எமக்கு மட்டும் இல்லையா?

ஆசிரியர்
முரசொலி

யாழ் மாவட்டத்திலுள்ள வர்த்தகநிலையங்களில் கடமைபுரியும் ஊழியர்க்கு கட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகள் முதலாளி மார்களினால் வழங்சப் படுவதில்லை எம்மை இவர்கள் இயந்திரம் போலவே நடாத்துகிறார்கள் எமக்கு சனிக்கிழமைகளில் அரைநாளும்,ஞாயிறு மற்றும் போயா தினங்களில் முழு நாளும் ஓய்வு கட்டாயம் வழங்கப்பட்டேயாக வேண்டும்.பண்டிகை தினங்களில் கடைகளில் வியாபாரம் மேற்கொள்வதற்கு நாம் எம்மால் இயன்ற ஒத்துழைப்பை வழங்குவோம் எமக்குரிய ஓய்வை நாம் பெற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

யாழ். வர்த்தக நிலைய ஊழியர்கள்

குறிப்பு:-இக்கடிதத்தில் வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் பல ஊழியர்கள் ஒப்பமிட்டுள்ளனர் அத்துடன் ஞாயிறு தினங்களில் கடைகளைப் பூட்டுவதற்கு பல முதலாளிமாரிடமிருந்து பெறப்பட்ட சம்மத ஒப்பங்களடங்கியபடிவங்களும் இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## சுவையான செய்திகள்

### விநாயகரை மறக்கலாமா?

ராந்தம் போர்க்கோட்டை என்றபகுதியில் ஒரு விநாயகர் கோவில். இந்த விநாயகருக்குத் தினமும் ஏராளமான கடிதங்கள், பல முக்கிய விசேஷங்களுக்கான அழைப்பிதழ்கள் என்பன வருகின்றன. தினமும் இக்கோவிலுக்கு 20 கிலோ எடையுள்ள தபால்கள் வருகின்றன. இக் கோவிற் பூசாரி தினமும் சுமார் ஒரு மணி நேரம் அழைப்பிதழ்கள் கடிதங்களை விநாயகருக்குப் படித்துக் காட்டிவிட்டுத்தான் பூஜைகளை நடத்துகிறார்.

### அமெரிக்கரும் சோதிடரும்

1989-ம் ஆண்டின் ஆரம்பத்தில் அமெரிக்காவின் பிரபல சோதிடர்கள் சொன்ன விடயங்கள் பல. அவற்றில் சோவியத் அதிபர் கொர்பர்ச்சேவ் நாட்டை விட்டு வெளியேறி அமெரிக்காவில் அடைக்கலம் புகுவார் என்பதும், வாடிகன் நகரப் போப் வாழும் இடத்தின் மீது ஒரு விமானம் விழும் என்பதும் முக்கியமானவை. லிபர்ட்டி சிலை தண்ணீருள் கவிழ்ந்து விடும் என்பதும் அவற்றுள் ஒன்று. அமெரிக்கச் சோதிடர்கள் கணித்த இந்தக் கணிப்பில் ஒன்றுகூட 1989-ம் ஆண்டில் நடக்கவில்லை. இதனால் அமெரிக்கர்களுக்கு ஜோதிடர்கள் மீது நம்பிக்கை குறைய ஆரம்பித்து விட்டதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## கதிர்காமர் கிண்ணத்தை சென்: பற்றிக்ஸ் பெற்றது

சென்ற நான்கு வருடங்களாக இராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்தை வென்று வந்த யாழ்ப்பாணக் கல்லூரியினர் இவ்வருடம் கோட்டை விட்டனர்: இப்போட்டியில் சென் பற்றிக்ஸ் அணியியினர் இம்முறை வெற்றியீட்டுவதற்கு முக்கிய காரணம் ஹறி அன்ரனிப் பிள்ளையின் அபார பந்து விச்சே என்று துணிந்து கூறலாம். இவர் தனது பந்து வீச்சில் முதலாவது ஓவரில் இரண்டு இலக்குகளை சரித்தமையே ஆட்டத்தின் திருப்பு முனையாக அமைந்தது சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் கடந்த 19–ஆம் திகதி சென் பற்றிக்ஸ்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ராஜன் திர்காமர் வெற்றிக் கிண்ணப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட களத்தில் இறங்கிய சென் பற்றிக்ஸ் அணி தனது துடுப்பாட்டத்தில் 39 ஓவர்களில் 105 ஒட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தது — இதில் விஜேந்திரா 18 ஒட்டங்களையும், ஜே. பி. பாஸ்கர சந்திரன் 22, ஏ ஜே. ஜஸ்ரின் 20, ஜி வில்ரன் 14, கியூ. யே. இம்மனுவல் 10 ஒட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். யாழ்ப்பாணக் கல்லூரி தனது துடுப்பாட்டத்தில் 43 ஒவர்களில் சகல விக்கற்றுகளையும் இழந்து 83 ஒட்டங்களை மாத்திரமே பெற்றதினுல் தோல்வியுற்றது. பரிசு பெற்றோர் விபரம்' மான் ஒவ் த மாச்' எம். என். ஹறி அன்ரனிப்பிள்ளை, சிறந்த பந்து வீச்சாளர் — பாரத், சிறந்த துடுப்பாட்டக்காரர் — ஜே. பி. பாஸ்கர சந்திரன், சிறந்த பந்துதடுப்பாளர். ஜே, ஆர். வன்னியசிங்கம். (16)

## சென். ஜோன்ஸ் வெற்றி

சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும் மகாஜனு கல்லூரிக்கும் இடையில், சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில, நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி ஒரு இனிங்சாலும், 6 விக்கற்றுகளாலும், 158 ஒட்டங்களாலும் வெற்றி ஈட்டியது. முதலில் துடுபெடுத்தாடிய மகாஜனு கல்லூரி 68 ஒட்டங்களை மாத்திரமே பெற்று ஆட்டம் இழந்தது. 2ஆவது இனிங்சிலும் அவர்களது துடுப்பாட்டம் அவ்வளவாக சோபிக்கவில்லை. சகல விக்கற்றுகளையும் துரித கதியில் பறிகொடுத்து 54 ஒட்டங்களையே பெற்றனர், பந்துவிச்சில் பி. முரளி முதல் இனிங்சில் 9 ஓவர்கள் பந்து வீசி 13 ஒட்டங்களை கொடுத்து 2 இலககுகளையும் 2வது இனிங்சில் 14 ஓவர்கள் பந்து வீசி 20 ஒட்டங்களுக்கு 7 இலக்குகளையும் கைப்பற்றினுர். T. சதீசன் முதலாவது இனிங்கில் 13.3 ஓவர்கள் பந்து விசி 20 ஒட்டங்களை கொடுத்து 4 இலக்குகளையும், L. பிரஷாந்தன் முதலாவது இனிங்சில் 11 ஓவர்கள் பந்து வீசி 2 ஒட்டங்களை கொடுத்து 4விக்கற்றுகளையும் வீழ்த்தினர்.

சென். ஜோன்ஸ் கல்லூரி அணி தனது துடுப்பாட்டத்தில் வெகுவிரைவாக 4 விக்கட் நஷ்டத்திற்கு 280 ஒட்டங்களை தவிர்த்து ஆட்டத்தை இடை நிறுததிக்கொண்டது. இதில J. ஜெயேந்திரன் 73, S. சுரேன்குமார 66, K. பிரஷாந்தன் 84, T, சதீசன ஆட்டம் இழக்காமல் 50 ஒட்டங்களையும பெற்றுக்கொடுத்தனர். (16)

# இன்று நாள் எப்படி?

மேடம்: உடல்ரோகம், பெரியோர் பகை, வாகனமாற்றம், பிதாவழியுதவி, கடற்தொழில் இயந்திரத்தொழில் மூலம் இலாபம்.

இடபம்: உத்தமர்களுறவு, வாக்குப்பலிதம், வாகனசுகம், தேடியவர் வருகை, புதுத் தொழில்.

மிதுனம்: புகழ்தேடிவரும், பெண்களாலுதவி, தூரத்துப் பிரயாணம், வாகனசுகம், புண்ணிய வழிபாடு.

கடகம்: சத்துருபயம், விவாகத்தடை, வாகனமாற்றம், உயர்பதவி, புண்ணியவழிபாடு.

சிங்கம்: இராஜமரியாதை, சகோதரவழியுதவி, தடைப்பட்ட பணவரவு, புதுத் தொழில்.

கன்னி: மாதாவழியுதவி, வாகனசுகம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

துலாம்: சகோதர வழியுதவி, பெரியோராசி, புண்ணிய வழிபாடு, புகழ் தேடிவரும். வாகனசுகம்.

விருச்சிகம்: பணவரவு, புண்ணியவழிபாடு, புகழ்தேடி வரும், தூரத்துச்செய்தியால் நன்மை.

தனுசு: உடல்ரோகம், இனப்பகை, வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

மகரம்: தூரத்துச் செய்தியாற் கவலை, பணத்தடை, மனைமாற்றம், தேடியவர் வருகை.

கும்பம்: வாகனசுகம், வணிகர்கள் இலாபம், சுகஜீவியம், பணவரவு, வாக்குப்பலிதம்.

மீனம்: பெண்களாற்சுகம், பெரியோர் வருகை, எண்ணியது நடக்கும், இளையசகோதர வழியுதவி, புதுத் தொழில்.

யாழ். சோதிடர்
ச அரியநாயகம்

## வானெலியில் இன்று

22. 03. 90 வியாழன்

காலை

5.05 தோத்திரமாலை- பார்த்தசாரதிசுப்ரபாதம்
8 00 லயவிந்யாசம்
8.15 மெல்லிசைப்பாடல்

பகல்

10 00 இசையமுதம்
10 30 தவில் கச்சேரி- வலங்கைமான் சண்முகசுந்தரம்
11 00 வயலின் குன்னக்குடி வைத்தியநாதன்

மாலை

6.15 இந்துசமயப்பேச்சு கதிர்காமத் தலமகிமை- தமிழின்பம் கணபதிப்பிள்ளை
6.30 வளரும் பயிர்- நடத்துபவர்- வனஜா ஸ்ரீநிவாசன்
6.45 பாவளம்- தொகுப்பு-சில்லையூர் செல்வராஜன்
7.00 கிராமசஞ்சிகை- வி ஏ.சிவஞானம்

இரவு

9.30 கலந்துரையாடல்
10 00 நாதஸ்வரம்- கே. எம். பஞ்சாபிகேசன்

## ஈரேஸ் எம். பி இரத்தினசபாபதி இராஜினமா

ஈழப்புரட்சி அமைப்பின் (ஈரோஸ்) அரசியற் கட்சியான, ஈழவர் ஜனநாய முன்னணியின் யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஈ. இரத்தினசபாபதி தமது எம். பி. பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார்

நேற்று மூன்தினம் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட இந்த ராஜினமா விடயம்; மேற்படி உறுப்பினரின் தனிப்பட்ட காரணங்களுடன் தொடர்புடையது எனபாராளுமன்றச் செயலாளர் நாயகம் நிஹால் செனவிரத்னவினுல் கூறப்பட்டது. அதை உறுதிப்படுத்தும் ராஜினமாக் கடிதமும் சபையில் வாசிக்கப்பட்டது.

## பளையில் இன்று பாராட்டு விழா

கொழும்பில் 14 02. 90 –20. 02. 90 திகதிகளில் நடைபெற்றமுதலாவது சார்க் ஜம்போதியில் கிளிநொச்சி மாவட்டத்தின் சார்பில் கலந்து கொண்ட பளை மகா வித்தியாலயசாரணர்களையும், தலைவரையும் கௌரவிக்குமுகமாக இன்று வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பளை மகாவித்தியாலயத்தில் பளை கொத்தணி அதிபர் அ. பொ. செல்லையா அவர்களின் தலைமையில் ஒரு பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக கிளி. பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ் வேலாயுதம் அவர்களும் சிறப்பு விருந்தினராக பளை உதவி அரசாங்க அதிபர் எஸ். கந்தசாமியும் கலந்துகொள்ளுவார்கள்.

## மகா சங்காபிஷேகம்

நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் நயினை ஸ்ரீ. நாகபூஷணி அம்பாளுக்கு மகா சங்காபிஷேகம் நடைபெற்று அம்மாள் உள் வீதி திருவுலாவும் இடம்பெறவுள்ளது.

## புலிகள் விழிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் உரும்பராய் பகுதியில் இரவு கண்காணிப்புநடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனுல் மக்கள் எதுவித அச்சமுமின்றி நிம்மதியாக வாழவழி ஏற்பட்டுள்ளது.

## கள்ளுக்கு அதிக கிராக்கி: கள்ளப்பனை ஏற்றமும் அதிகரிப்பு

கசிப்பு விற்பனை தடை செய்யப்பட்டுள்ளதையடுத்து கள்ளுக்கு மதுதாஸர்கள் மத்தியில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. கள்ளுக்கு இதனுல் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையடுத்து கள்ளப்பனை ஏறும் கும்பல் ஒன்றும் உருவாகியுள்ளதாம்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பகுதிக் கிராமம் ஒன்றில் இரவு வேளையில்களவாகப் பிறர் பனைகளில் ஏறி குறிப்பிட்ட கும்பல் கள்ளைக் குடித்து முட்டிகளைக் காலியாக்கி விடுவதாகக் கூறப்படுகிறது.

### பயிலுநர் ஆசிரியர் தெரிவில்

## கவலை மகிழ்ச்சியானது மகிழ்ச்சி கவலையானது

பயிலுநர் ஆசிரியர் சம்பந்தமாக மேன் முறையீடு செய்த சிலர் பரிசீலனைக்குப் பின் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் முன்னர் தெரிவுசெய்யப்பட்ட சிலர் பரிசீலனைக்குப் பின்னர் நீக்கப்பட்டுள்ளனர்.

இதனுல் கவலையோடிருந்தவர்கள்மகிழ்ச்சியையும், மகிழ்ச்யோடிருந்தவர்கள் கவலையையும் அனுபவிக்க வேண்டிய நிலையாழ் மாவட்டதில் ஏற்பட்டுள்ளமையை காணக் கூடியதாகவுள்ளது.

மன்னுர், கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்டோர் அப்படியே இருக்கக்கூடியதாக மேன் முறையீடு செய்தோர் சிலர் மேலதிகமாகவே தெரிவு செய்யப் பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மட்டுநகர் வங்கிகளில் மந்தகதியில் கருமங்கள்

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வங்கிக் கிளைக்களில் வங்கிவேலைகள் யாவும் மந்தகதிலேயே நடைபெறுவதாகப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கிருர்கள்

மட்டக்களப்பு மக்கள் வங்கி நகரக்கிளையில் வைப்புச் செய்யப்படும் காசோலைகள் களுவாஞ்சிக்குடி மக்கள் வங்கிக்கு அனுப்பப்பட்டு அவை மாற்றி வர சுமார் 14 நாட்கள் எடுப்பதாகவும், இதனுல்வாடிக்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

தபால் சேவையில் எந்தவித தாமதமும் தற்போது இல்லாத பொழுதிலும் மேற்படி தாமதம்குறித்து வாடிக்கையாளர் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

மேற்படி வங்கியில் புதிய கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கும் இரண்டு நாட்கள் செலவிடவேண்டிய அவலநிலை காணப்படுகிறதாம் பத்திரங்களை நிரப்பிப் பணம் கட்டிய அன்று பணவைப்புப் புத்தகம் வழங்கப்படாது மறு நாளே அப்புத்தகம்வழங்கப்படுகிறது. இதனுல் வாடிக்கையாளர் பல சிரமங்களை எதிர்நோக்குகிருர்கள். (05)

## அதிபர் விபரம் சேகரிப்பு

வடமராட்சி கோட்டக் கல்விப்பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளில் தற்போது கடமையாற்றிவரும் அதிபர், உப அதிபர், உதவி அதிபர் பகுதித் தலைவர், ஆகியோர்களினது தரங்கள், தகைமைகள் போன்ற தகவல்கள் திரட்டப்பட்டுவருகின்றன.

இது சம்பந்தமான சுற்றறிக்கை வடமராட்சி கோட்டத்திற்கு உட்பட்ட சகல பாடசாலைகளுக்கும் கோட்டக் கல்வி அதிகாரியினுல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### மாங்குளம், ஒட்டுசுட்டான்

## பொலிஸ் நிலையங்களில் வெடிமருந்துக் களஞ்சியங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று புதிய கல் உடைக்கும் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

துணுக்காய் ஒட்டுசுட்டானில் பொருத்தப்பட்டுள்ள இவ்வியந்திரங்கள் மூலம் இப்பகுதிக்கு தேவையான கருங்கற்களைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிவீதிகளைத்திருத்துவதற்குத்தேவையான கற்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் வெடி மருந்துக் களஞ்சியங்களும் இங்கு அமைக்கப்பட்டு வருகின்றன

வீண் விரையங்களைத் தவிர்க்கும் வகையில் இந்த வெடி மருந்துக் களஞ்சியங்கள் மாங்குளம், ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையங்களில் அமைக்கப்படும் (38)

### விவசாயிகள்

## ஓய்வூதியக்கட்டுப் பணத்தை கிராமியவங்கிகளில்செலுத்தலாம்

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்துள்ளவர்கள் தமது தவணைப் பணகொடுப்பனவுகளை ஏப்ரல் முதலாம் திகதி முதல் அவர்கள் பகுதிக்கு அண்மையிலுள்ள கூட்டுறவுக்கிராமிய வங்கிகளில் செலுத்த முடியும். யாழ். கிளிநொச்சிமாவட்டங்களுக்கான கமத்தொழில் காப்புறுதிப்பணிப்பாளர் சு சிவகுரு இத்தகவல்களைத்தெரிவித்தார்.

இதுவரை காலமும் கமநல சேவை நிலையங்களுடாக மேற்கொள்ளப்பட்டு வந்த இத் தவணைப் பணம் செலுத்துகைகளை இனிமேல் கிராமிய வங்கிகள் மூலம் இலகுவாக மேற்கொள்ளலாம் என்ருர் (34)

## பதவியுயர்வு

கிளிநொச்சி பால் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளராகக் கடமையாற்றி வந்த வி. தயாபரன் மில்க்கோ நிறுவனத்தின் கிளிநொச்சி பால் கொள்வனவுமுகாமையாளராக கடந்த வாரம் தொடக்கம் நியமிக்கப் பட்டுள்ளார். (35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MHURASOLIE REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA 22-03-1990 வியாழக்கிழமை

வவுனியாவில்

## டிப்போ ஊழியர் வேலைநிறுத்தம் பேச்சுவார்த்தை மூலம் சுமுகம்

வவுனியா இ போ. ச. டிப்போ பஸ்கள் இயந்திரவியல் பகுதி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தினுல் சேவையில் ஈடுபடவில்லை.

இதுபற்றி தெரிவிக்கப்படுவதாவது மேற்படி டிப்போ இயந்திரவியல் பகுதி ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டதினுலேயே செவ்வாயன்று பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை,

வவுனியாவில் தரித்துநின்ற ஏனைய மாவட்டங்களில் டிப்போ பஸ்கள் வவுனியா நிலையத்திலிருந்து உரிய இடங்களுக்கு புறப்பட்டு சென்றது குறிப்பிடத்தக்கது இயந்திரவியல் பகுதி ஊழியர்களுடன் சமரச முயற்சி தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டதினை அடுதது காலை 10.30 மணிமுதல் வழமையான சேவைகள் நடைபெற்றதாக சாலை வட்டாரங்கள் தெரித்தன. (11)

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில்

## 10 வருடங்களாக நிரந்தர வைத்திய அதிகாரி இல்லை

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாமல் வெற்றிடமாகவுள்ளது.

சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக இங்கு நிரந்தர வைத்திய அதிகாரி இல்லாமல் அப்பகுதி மக்களும், நோயாளர்களும் பெருந்துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றுர்கள்.

இவ்வைத்தியசாலையில் ஒரு வைத்திய அதிகாரியும் இரு உதவி டாக்டர்களும் சேவைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் ஒரு டாக்டர்மட்டுமே சேவைகளை மேற்கொண்டுவருகின்றுர். (20)

## வவுனியா ரயில் பாதையில் தண்டவாள தகடு, ஆணி திருட்டு

வவுனியா-மாங்குளம் ரயில் வீதியில் 29 ரயில் றேட்டு இருப்புத் தகடுகளும், 118 தண்டவாளத்துடன் இணையும் ஆணிகளும் அபகரிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வவுனியா பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பழைய இரும்பு விற்பனைக்காக இந்த தகடுகளும், ஆணிகளும் திருடப்பட்டிருக்கலாம் என இராணுவ வட்டாரங்கள் கூறின. [11]

## மன்னரில் புதிய உணவுமுத்திரை வழங்கும் ஏற்பாடுகள் ஆரம்பம்

மன்னுர் உதவிக் கோட்ட ஆணையாளர் பிரிவில் உள்ள கிராமசேவையாளர் பகுதிகளில் புதிய உணவு முத்திரை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. இதுபற்றி உதவிக் கோட்ட ஆணையாளர் திரு இராமலிங்கம் அவர்கள் தெரிவிக்கையில்;

மக்களுக்கான உணவு முத்திரை விநியோகத்தை வெகு விரைவில் செய்து கொடுக்க, மக்கள் தரவுகளை சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யேசாலை, தலை மன்னுர், எருக்கலம்பிட்டி, தாழ்வுபாடு ஆகிய பகுதிகளில் கிராம சேவையாவர்களுடன், தொண்டர்களும் தரவுகள் சேகரிக்கும் பணியில் முனைப்பாக இயங்குகின்றனர். எனவும் குறிப்பிட்டார். (48)

## கிளிநொச்சியில் இன்று புனர்வாழ்வுக் கூட்டம்

கிளிநொச்சி கச்சேரியில் புனர்வாழ்வு சம்பந்தமான பொதுக்கூட்டம் இன்று வியாழக் கிழமை அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகலஇலாகாக்களின் உயர் அதிகாரிகளும் தலைவர்களும் அழைக்கப்படவுள்ளனர்.

புனர்வாழ்வு சம்பந்தமான வேலைகளை விரைவில் முடிப்பது பற்றியும் கொடுப்பனவுகளை எதுவ்ததாமதமும் இன்றி வழங்க நடவடிக்கை எடுப்பது பற்றியும் இக்கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படவுள்ளது (35)

### மட்டு...

பதில் மட்டுமே தெரிவிக்கப்பட்டது. வேறு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என ஊழியர் தெரிவித்தனர்,

நேற்று நண்பகல் 12 மணியளவில் மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளர் கு. சோமசுந்தரம் ஊழியர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து அவர்கள் மீள வேலைக்குத் திரும்பினர்.

ஊழியர்களின் போராட்டம் முன்னறிவித்தலோடு நடத்தப்பட்ட ஒரு நியாயமான போராட்டம் என்றும் தாம் ஊழியர்களிடம் கால அவகாசம் கேட்டதாகவும் மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (05)

## நடேஸ்வராக் கல்லூரியில் இன்று

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் இன்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டமும் கலை கலாசார பிரிவினர் வழங்கும் 'நடந்து வந்த பாதை' வில்லிசையும் 'விடியலைத் தேடுவோம்' இசை நாடகமும் இடம் பெறவுள்ளது.

### மாகாண...

வழிகள் உள்ளதாலேயே அரசு அதுகுறித்து அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை என்றும் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### வடகிழக்கு...

ஜனுப் எம். ஐ. எம். ஜமால்டீன, ஜனுப் கே. எம். ஹபீப் முஹமத் ஆகியோரின் பெயர்களும் அக்கடிதத்தில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா தினேஷ் உரை:

# புலிகளின் தியாகத்திலும் பூபதியின் தியாகம் மேல்

வீர வேங்கைகளின் தியாகத்திலும் அன்னை பூபதியின் தியாகம் பன்மடங்கு பெரியது எமது சமுதாயத்தின் விடிவெள்ளி இந்தவீரத் தாய்.

இவ்வாறு வவுனியா மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணியின் பொறுப்பாளர் திரு. என். தினேஸ் குறிப்பிட்டார்.

குருமன்காடின்என்னுமிடத்தில் நடைபெற்ற அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கலைமகள் விளையாட்டுக் கழக தலைவர் திரு. ஆர். செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தினேஸ் மேலும் பேசுகையில்;

பெண் சமுதாயத்தின் விடிவெள்ளியாக அன்னை பூபதி வரலாற்றில் இடம் பிடித்துள்ளார். சர்வதேச ரீதியிலும் இவ் அன்னை வீர சமுதாயத்தின் விடிவெள்ளியாக உள்ளார். தூங்கிய சமுதாயத்தினை தட்டி எழுப்பி தன்னுயிரை கொடுத்தார்.

அன்னிய ஆதிக்க சக்தியின் பாதம் பதிந்திருந்த எமது பிரதேசத்தில் எதிர்காலத்தில் எமது இனம் சுபீட்சத்துடனும் அமைதியுடனும் வாழ வேண்டும் என்ற கருவுடன் தன் உயிரை அர்ப்பணித்துள்ளார்.

இந்திய அரசின் முகமூடியினை கிழித்தெறிந்த இந்த வீரத்தாய்க்கு நாம் தலைவணங்குகின்றோம் என்றும் குறிப்பிட்டார். (13)

## பிரபல தவில் மேதை சின்னராசாவிற்கு பொன்னுடை

நாளை வியாவில் ஐயனுர் ஆலயத்தில் பிரபல தவில் மேதை என் ஆர். சின்னராசாவிற்கு பாராட்டு விழா ஒன்று நடைபெறும். இவ்விழாவில் சின்னராசா அவர்கள் பொன்னுடை போர்த்தியும், பதக்கம் சூட்டப்பட்டும் கௌரவிக்கப்படுவார்.

### க பொ த...

பின் இதற்கான திருத்தங்களை மேற்கொள்ள உடனடியாக பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் பரீட்சார்த்திகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (03)

### பரந்தன்...

பரந்தன் தொழிற்சாலையைப் புனரமைப்புச் செய்; தொழிற்சாலை உற்பத்தியை உடன் ஆரம்பி; கூட்டுத்தாபனத் தலைவரின் தீர்மானத்தை அமுல்படுத்து; தலைவர் வேண்டுவது உற்பத்தி, அமைச்சு வைக்கிறது ஆப்பு: குளோரின் உற்பத்தியைத் தடுக்காதே; தேசிய நலனுக்காக இறக்குமதியை நிறுத்து; தென்னிலங்கையில் புதிய தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டத்தைக் கைவிடு; போன்ற சுலோகங்கள் கோஷிக்கப்பட்டன.

இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் உபாலி டி சில்வா கடந்த ஜனவரி மாதம் தொழிற்சாலைக்கு நேரடி விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்ததுடன் ஏப்ரல் மாதம் முதல் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு பணிப்புரை வழங்கியிருந்தார். எனினும் அமைச்சு பல்வேறு சாட்டுக்களைத் தெரிவித்து உற்பத்தியை ஆரம்பிப்பதை இழுத்தடித்து வருகின்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் முதற்கட்ட நடவடிக்கையே தற்போதுநடைபெறும் பிக்கெட்டிங் நடவடிக்கை என்று சி. எம். யூ தலைவர் ப. சேகர் தெரிவித்தார். இது சம்பந்தமான பல சுவரொட்டிகள் பரந்தன், கிளிநொச்சி பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன.

மேலும் சி. எம். யூ இது சம்பந்தமான அறிக்கை நேற்றைய முரசொலியில் வெளியாகியுள்ளமைகுறிப்பிடத்தக்கது,

## யாழ். தபாலக சமயாசமய ஊழியர் வேலைமறிப்பு

யாழ், தபால் திணைக்களத்தில் உள்ள நிர்வாக தவறுகளைக் கண்டித்து திணைக்களத்தில் பணிபுரியும் அனைத்து சமயா சமய ஊழியர்களும் தருக்கு நியாயதீர்வு கிடைக்கும் வரை வேலை மறிப்பு செய்யப்போவதாக அறிவித்திருக்கின்றனர்,

ஒரு சிலருக்கு சட்டத்திற்குப் புறம்பான சலுகைகள் வழங்கப்படுவதாக இவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

## மட்டு.மாவட்ட பயிலுநர் ஆசிரியர் 442 பேர் இன்று பொறுப்பேற்பர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 442 பயிலுநர் ஆசிரியர்கள் நாளை தமது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர் என மட்டக்களப்பு பிரதிக்கல்விப்பணிப்பாளர் கு. சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இவர்களுடன் 24 உடற்பயிற்சி ஆசிரியர்களும் 23கலை, விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களும் கொத்தணி ரீதியாக நியமிக்கப்பட்டுள்ளனர். (05)

## பலாலி இலங்கை இராணுவ முகாம்முன் வீதித்தடைநீக்கம்

இந்தியப் படை வெளியேறத்தைத் தொடர்ந்து நேற்றையதினம் பலாலி இலங்கை இராணுவ முகாம் முன்னுல் இருந்த வீதித்தடை அகற்றப்பட்டு போக்குவரத்திற்குத் திறந்துவிடப்பட்டது.

தெல்லிப்பளை அரசினர்வைத்தியசாலைக்கான பிரதானவீதி இன்றைய தினம் திறக்கப்படவுள்ளது இதுபற்றி நேற்றைய முரசொலி செய்தி வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

## இன்று இவர்களுக்கு நிவாரணம்

இன்று யாழ் ஆஸ்பத்திரி வீதி இலங்கைவங்கிக்கிளையில் சாவகச்சேரி உ. அ. அதிபர் பிரிவில் கல்வயல் கிராமசேவையாளர் பகுதிக்கு இரண்டாம் கட்ட 1000 ரூபா நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

நாளைய தினம் சாவகச்சேரி கிழக்குப்பகுதிக்கும், 26-ம் திகதி மீசாலை தெற்குப் பகுதிக்கும் இந்த நிவாரணம்வழங்கப்படவுள்ளது.

யாழ் செயலகம் எடுத் துரித நடவடிக்கையால் இதுவரை 1700 குடும்பங்களுக்கு 1000 ரூபாவழங்கப்பட்டுளது(03)

### ஒரிஸாவிற்கு...

உறுப்பினர் திரு. எஸ் ஆர். இராதா ஒரிஸாவுக்கு அனுப்பப்பட்டவர்களை மீண்டும் தமிழகத்தில் அனுமதிக்குமாறு கோரியபோதே முதல்வர் கருணுநிதி இந்தக்கருத்தைக் வெளியிட்டார்.

ஒரிஸாவுக்கு அனுப்பப்பட்டவர்கள் அகதிகள் அல்ல எனவேதான் அவர்கள் ஒரிஸாவுக்கு அனுப்பப்பட்டனர் உண்மையான அகதிகளுக்கு தமிழ் நாடு தஞ்சம் அளிக்கும் என முதலமைச்சர் மேலும் கூறினுர்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வரதராஜன் தமிழ்நாட்டில் சில பகுதிகளில் தமிழ்ப்போராளிகள் ஆயுதபயிற்சி பெறுகின்றனர் என்று கூறியபோது, இது பத்திரிகைகள் வெளியிட்ட செய்தி தான் எனினும் நாம் இது குறித்து விசாரணை நடாத்துவதாக முதலமைச்சர் மு. கருணுநிதி தெரிவித்தார். இது தொடர்பாக பொலிஸ் விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும்சட்டப்பேரவையில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

### கொடுப்பனவு...

விசாரணையின் போது அம்பலமாகியது.

இதனை அடுத்தே குறிப்பிட்ட கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டு வவுனியா பொலிஸ் றிமாண்டில் வைக்கப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறின.

குறிப்பிட்ட கான்ஸ்டபிள் திருகோணமலையினைச் சேர்ந்தவர் அண்மையில் இடம்பெற்ற நியமனத்தின் போது வவுனியா நிலையத்திற்கு நியமிக்கப்பட்டவர். பெரும்பான்மை சமூகத்தினைச்சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடதக்கது.

அதேவேளை வவுனியா பொலிஸ் விடுதியில் பொலிசாரின் சில முக்கியபொருள்கள் திடீரென காணுமல் போய் விடுகின்றனவாம,

இவர்களின் விடுதிக்குள் வெளியார் செல்லமுடியாதது தெரிந்ததே. உள் வீட்டுக்குள்ளே இச் செயல்கள் நடைபெறுவதாக சம்பந்தப்பட்டவர்கள் கவலையுடன் தெரிவித்தனர். (11)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ [இலக்கத்திலுள்ள அச்சகப்] பிரிவில் 22-03-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org